www.Padasalai.Net www.TrbTnpsc.com

Tsl10T

தென்காசி மாவட்டம்
இரண்டாம் பொதுத் திருப்புதல் தேர்வு - 2025

பத்தாம் வகுப்பு

நேரம்: 3.00மணி
தமிழ்
மதிப்பெண்கள்: 100

குறிப்பு: i) இவ்வினாத்தாள் ஐந்து பகுதிகளைக் கொண்டது.
ii) விடைகள் தெளிவாகவும் குறித்த அளவினதாகவும் சொந்த நடையிலும் அமைதல் வேண்டும்.

பகுதி – I (மதிப்பெண்கள் : 15)

உரிய விடையைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் எழுதுக. 15x1=15

1. '<u>காய்ந்த இலையும் காய்ந்த தோகையும்</u>' நிலத்துக்கு நல்ல உரங்கள் - இத்தொடரில் அடிக்கோடிட்ட பகுதி குறிப்பிடுவது -
அ) இலையும் சருகும் ஆ) தோகையும் சண்டும்
இ) தாளும் ஓலையும் ஈ) சருகும் சண்டும்

2. பொருந்தும் விடை வரிசையைத் தேர்ந்தெடுக்க.

| | | |
|---|---|---|
| அ) செங்காந்தள் | - | 1) அன்மொழித்தொகை |
| ஆ) சிவப்புச் சட்டை பேசினார் | - | 2) உவமைத்தொகை |
| இ) வீசு தென்றல் | - | 3) பண்புத்தொகை |
| ஈ) மலர்க்கை | - | 4) வினைத்தொகை |

அ) 1, 2, 3, 4 ஆ) 3, 1, 4, 2 இ) 4, 3, 2, 1 ஈ) 3, 4, 1, 2

3. "விருந்தினரும் வறியவரும் நெருங்கி யுண்ண
மேன்மேலும் முகமலரும் மேலோர் போல" என்னும் அடிகள் இடம்பெற்றுள்ள நூல் -
அ) கம்பராமாயணம் ஆ) நற்றிணை இ) கலிங்கத்துப்பரணி ஈ) புறநானூறு

4. பெருமை முயற்சி தரும் - இக்குறளடிக்குப் பொருந்தும் வாய்பாடு -
அ) கூவிளம் தேமா மலர் ஆ) புளிமா தேமா பிறப்பு
இ) புளிமா கூவிளம் நாள் ஈ) புளிமா புளிமா மலர்

5. பாரத ஸ்டேட் வங்கியின் உரையாடு மென்பொருள் எது?
அ) துலா ஆ) சீலா இ) குலா ஈ) இலா

6. "இங்கு நகரப் பேருந்து நிற்குமா?" என்று வழிப்போக்கர் கேட்டது --- வினா.
"அதோ அங்கே நிற்கும்" என்று மற்றொருவர் கூறியது ---- விடை.
அ) ஐயவினா, வினா எதிர்வினாதல் ஆ) அறிவினா, மறை விடை
இ) அறியாவினா, சுட்டு விடை ஈ) கொளல்வினா, இனமொழி விடை

7. தூக்குமேடை என்னும் நாடகத்தின் பாராட்டு விழாவில்தான் கலைஞர் என்ற சிறப்புப்பெயர் வழங்கப்பட்டது. இத்தொடருக்கான வினா எது?
அ) தூக்குமேடை நாடகத்தில் நடித்தவர் யார்?
ஆ) கலைஞர் என்ற சிறப்புப் பெயர் எப்போது வழங்கப்பட்டது?
இ) தூக்குமேடை என்பது திரைப்படமா? நாடகமா?
ஈ) யாருக்குப் பாராட்டுவிழா நடத்தப்பட்டது?

8. தமிழினத்தை ஒன்றுபடுத்தும் இலக்கியமாக ம.பொ.சி. கருதியது ---
அ) திருக்குறள் ஆ) புறநானூறு இ) கம்பராமாயணம் ஈ) சிலப்பதிகாரம்

9. உலகமே வறுமையுற்றாலும் கொடுப்பவன் என்றும் பொருள்களின் இருப்பைக்கூட அறியாமல் கொடுப்பவன் என்றும் பாராட்டப்படுவோர் –
அ) உதியன் , சேரலாதன் ஆ) அதியன் , பெருஞ்சாத்தன்
இ) பேகன் , கிள்ளிவளவன் ஈ) நெடுஞ்செழியன் , திருமுடிக்காரி

10. 'வாய்மையே மழைநீராகி' - இத்தொடரில் வெளிப்படும் அணி -
அ) உவமை ஆ) உருவகம் இ) தற்குறிப்பேற்றம் ஈ) தீவகம்

11. தன்மையணியின் வகைகள் -
அ) இரண்டு ஆ) மூன்று இ) நான்கு ஈ) ஐந்து

Kindly Send Me Your Questions & Answer Keys to us: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



**பாடலைப் படித்துப் பின்வரும் வினாக்களுக்கு (12, 13, 14, 15) விடை தருக.**

**"விசும்பில் ஊழி ஊழ் ஊழ் செல்லக்**
**கரு வளர் வானத்து இசையில் தோன்றி**
**உரு அறிவாரா ஒன்றன் ஊழியும்**
**உந்து வளி கிளர்ந்த ஊழி ஊழ் ஊழியும்"**

12. 'ஊழ் ஊழ்' என்பதன் இலக்கணக் குறிப்பு –
அ) இரட்டைக்கிளவி ஆ) பண்புத்தொகை இ) அடுக்குத்தொடர் ஈ) வினைத்தொகை

13. இப்பாடலின் ஆசிரியர் -
அ) கீரந்தையார் ஆ) பூதஞ்சேந்தனார் இ) நப்பூதனார் ஈ) குலசேகராழ்வார்

14. இப்பாடலில் உணர்த்தப்படும் கருத்து
அ) தத்துவக் கருத்து ஆ) அறிவியல் கருத்து
இ) நிலையாமை ஈ) அரசியல் அறம்

15. விசும்பு, இசை, ஊழி – பாடலில் இச்சொற்கள் உணர்த்தும் பொருள்கள் முறையே
அ) காற்று, ஓசை, கடல் ஆ) மேகம், இடி, ஆழம்
இ) வானம், பேரொலி, யுகம் ஈ) வானம், காற்று, காலம்

## பகுதி – II (மதிப்பெண்கள் : 18)

### பிரிவு - 1

**எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் குறுகிய விடையளிக்க.** **4x2=8**
**21 ஆவது வினாவிற்குக் கட்டாயமாக விடையளிக்க வேண்டும்.**

16. விடைக்கேற்ற வினாக்கள் அமைக்க.
அ) சொற்பொழிவுகளைக் கேட்பதன் மூலமாக ம.பொ.சி. இலக்கிய அறிவு பெற்றார்.
ஆ) கிரேக்க அறிஞர் ஹிப்பாலஸ் என்பவர் பருவக் காற்றின் பயனை உலகிற்கு உணர்த்தினார்.

17. தற்கால உரைநடையில் சிலேடை அமையும் நயத்திற்கு எடுத்துக்காட்டு தருக.

18. ஜெயகாந்தனின் திரைப்படமான படைப்புகளில் எவையேனும் இரண்டினை எழுதுக.

19. மருத்துவத்தில் மருந்துடன் அன்பும் நம்பிக்கையும் ஆற்றும் பாங்கினை எழுதுக.

20. காலக் கழுதை கட்டெறும்பானதும் கவிஞர் செய்வது யாது?

21. நற்பண்புடையோரின் நட்பைக் கைவிடுதலால் வரும் தீமை பற்றிக் குறிப்பிடும் திருக்குறளை எழுதுக.

### பிரிவு - 2

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் குறுகிய விடையளிக்க** **5x2=10**

22. "உடுப்பதூஉம் உண்பதூஉம் காணின் பிறர்மேல் வடுக்காண் வற்றாகும் கீழ்"
இக்குறளில் அமைந்துள்ள அளபெடையின் வகையைச் சுட்டி அதன் இலக்கணம் தருக.

23. அ) ஓடிக் கொண்டிருந்த மின்விசிறி சட்டென நின்றவுடன் அறையில் உள்ளவர்கள் பேச்சு தடைப்பட்டது. - **இத் தொடரைத் தனிச்சொற்றொடர்களாக மாற்றுக.**
ஆ) அழைப்பு மணி ஒலித்தது. கயல்விழி கதவைத் திறந்தாள்.
**– தனிச்சொற்றொடர்களைக் கலவைத் தொடர்களாக மாற்றுக.**

24. **கொடுக்கப்பட்ட இரு சொற்களைப் பயன்படுத்தி ஒரு தொடர் அமைக்க.**
அ) மலை - மாலை ஆ) கொடு - கோடு

25. **கலைச்சொற்கள் தருக.** அ) Intellectual ஆ) Screen play

26. **தொழிற்பெயர்களின் பொருளைப் புரிந்து கொண்டு தொடர்களை முழுமை செய்க.**
அ) காட்டு விலங்குகளைச் ............. தடை செய்யப்பட்டுள்ளது.
செய்த தவறுகளைச் .......... திருந்த உதவுகிறது. (சுட்டல், சுடுதல்)
ஆ) பொதுவாழ்வில் .......... கூடாது. ......... அவரை மிஞ்ச ஆள் கிடையாது. (நடிப்பு, நடித்தல்)

27. **பழமொழிகளை நிறைவு செய்க.**
அ. விருந்தும் ...................... ஆ. அளவுக்கு மிஞ்சினால் ................

28. **பகுபத உறுப்பிலக்கணம் தருக.**
பொழிந்த

Kindly Send Me Your Questions & Answer Keys to us: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



## பகுதி – III (மதிப்பெண்கள் : 18)

### பிரிவு - 1

எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமான விடையளிக்க 2x3=6

29. சோலைக் காற்றும் மின்விசிறிக் காற்றும் பேசிக்கொள்வது போல் ஓர் உரையாடல் அமைக்க.

30. தமிழ் மொழிக்காகக் கலைஞர் செய்த சிறப்புகளுள் நீங்கள் அறிந்துகொண்ட இரண்டினை எழுதுக.

31. உரைப் பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.

அறங்கூறும் மன்றங்கள் அரசனின் அறநெறி ஆட்சிக்குத் துணை புரிந்தன. அறம் கூறும் அவையம் பற்றி 'அறம் அறக்கண்ட நெறிமான் அவையம்' என்கிறது புறநானூறு. உறையூரிலிருந்த அற அவையம் தனிச் சிறப்பு பெற்றது என்று இலக்கியங்கள் குறிப்பிடுகின்றன. மதுரையில் இருந்த அவையம் பற்றி மதுரைக்காஞ்சி குறிப்பிடுகிறது. அங்குள்ள அவையம் துலாக்கோல் போல் நடுநிலை மிக்கது என்கிறது.

அ) அரசனின் அறநெறி ஆட்சிக்குத் துணை புரிந்தவை எவை?

ஆ) அவையம் பற்றிப் புறநானூறு கூறுவது யாது?

இ) மதுரைக் காஞ்சி குறிப்பிடும் அவையம் பற்றி எழுதுக.

### பிரிவு - 2

எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமான விடையளிக்க 2x3=6

34 ஆவது வினாவிற்குக் கட்டாயமாக விடையளிக்க வேண்டும்.

32. கூத்தனைக் கூத்தன் ஆற்றுப்படுத்துதலைக் கூத்தராற்றுப்படை எவ்வாறு காட்டுகிறது?

33. வள்ளுவம் சிறந்த அமைச்சருக்குக் கூறிய இலக்கணங்கள் நமக்கும் பொருந்துவதைக் குறள் வழி விளக்குக.

34. அடிபிறழாமல் எழுதுக.

"சிறுதாம்பு தொடுத்த" எனத் தொடங்கும் முல்லைப்பாட்டுப் பாடல்.

(அல்லது)

"தூசும் துகிரும்" எனத் தொடங்கும் சிலப்பதிகாரப் பாடல்.

### பிரிவு - 3

எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமான விடையளிக்க 2x3=6

35. "முயற்சி திருவினை ஆக்கும் முயற்றின்மை
இன்மை புகுத்தி விடும்"

- இக்குறட்பாவில் அமைந்துள்ள பொருள்கோளின் வகையைச் சுட்டி விளக்குக.

36. தீவக அணியை விளக்கி அதன் வகைகளைக் குறிப்பிடுக.

37. அலகிட்டு வாய்பாடு தருக.

நாள்தொறும் நாடி முறைசெய்யா மன்னவன்
நாள்தொறும் நாடு கெடும்.

## பகுதி – IV (மதிப்பெண்கள் : 25)

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க 5x5=25

38. அ) முல்லைப்பாட்டில் உள்ள கார்காலச் செய்திகளை விவரித்து எழுதுக.

(அல்லது)


ஆ) சிலப்பதிகார மருவூர்ப்பாக்க வணிக வீதிகளை இக்கால வணிக வளாகங்களோடும், அங்காடிகளோடும் ஒப்பிட்டு எழுதுக.

39. அ) ஓட்டுநர் உரிமம் பெற்றுள்ள உன் தோழருக்குக் கடைப்பிடிக்க வேண்டிய சாலை விதிகள் குறித்துக் கடிதம் ஒன்றை எழுதுக.

(அல்லது)

ஆ) உங்கள் பகுதியில் தேங்கியுள்ள மழைநீரை அகற்றவும் புதை சாக்கடையைத் தூர் வாரவும் வேண்டி நகராட்சி ஆணையருக்குக் கடிதம் எழுதுக.

40. காட்சியைக் கண்டு கவினுற எழுதுக.



www.Padasalai.Net

Kindly Send Me Your Questions & Answer Keys to us: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com



41. வீட்டு எண்.36-18, பொதிகை நகர், தென்காசி மாவட்டத்தில் வசித்து வரும் எழில்வேந்தனின் மகள் வெண்பாவுக்காக, கொடுக்கப்பட்டுள்ள தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் உறுப்பினர்சேர்க்கை விண்ணப்பப் படிவத்தை நிரப்புக.

42. அ) பள்ளியிலும் வீட்டிலும் உன் செயல்களை அட்டவணைப்படுத்துக.

| பள்ளியில் நான் | வீட்டில் நான் |
|---|---|
| நேரத்தைச் சரியாகக் கடைப்பிடிப்பேன் | வீட்டு வேலைகளைச் செய்வேன் |
| | |
| | |
| | |
| | |

(அல்லது)

(ஆ) *மொழிபெயர்க்க.*

1. Education is what remains after one has forgotten what one has learned in School. – Albert Einstein
2. Tomorrow is often the busiest day of the week. – Spanish Proverb
3. It is during our darkest moments that we must focus to see the light. – Aristotle
4. Success is not final, failure is not fatal. It is the courage to continue that counts. – Winston Churchill.

## பகுதி – V (மதிப்பெண்கள் : 24)

**அனைத்து வினாக்களுக்கும் விரிவான விடையளிக்க** **3x8=24**

43. அ) உங்கள் இல்லத்துக்கு வந்த உறவினருக்கு நீங்கள் செய்த விருந்தோம்பலை அழகுற விவரித்து எழுதுக.

(அல்லது)

ஆ) ஜெயகாந்தனின் நினைவுச் சிறப்பிதழை வார இதழ் ஒன்று வெளியிட இருக்கிறது. அதற்கான ஒரு சுவரொட்டியை வடிவமைத்து எழுதுக.

44. அ) அன்னமய்யா என்னும் பெயருக்கும் அவரின் செயலுக்கும் உள்ள பொருத்தப் பாட்டினைக் கோபல்லபுரத்து மக்கள் கதைப்பகுதி கொண்டு விவரிக்க.

(அல்லது)

ஆ) இராமனுசர் நாடகத்தின் மூலம் அறியலாகும் செய்திகள் யாவை?

45. அ) குறிப்புகளைக் கொண்டு கட்டுரை ஒன்று தருக.

முன்னுரை – தமிழக எல்லை – தமிழன்னை – சான்றோர் வளர்த்த தமிழ் - முடிவுரை

(அல்லது)

ஆ) முன்னுரை – மனித வாழ்வு அறம் சார்ந்தது - இலக்கியம் காட்டும் அறம் - அறத்தான் வருவதே இன்பம் - முடிவுரை

*****

Kindly Send Me Your Questions & Answer Keys to us: padasalai.net@gmail.com